# The Class to be honoured By the Lord
# கர்த்தரால் கனப்படுத்தப்படுகிற வகுப்பார்

## R 5703

*“என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்.”* *1 சாமுயேல் 2:30*

நாம் பார்க்கிற வசனம் ஏ– மற்றும் அவனது குடும்பத்தோடு இணைந்ததாக இருக்கிறது. ஏ– தேவனுடைய பிரதிநிதியாக இருந்தான். அவன் இஸ்ரயே–ன் ஒரு ஆசாரியனாகவும் நியாயாதிபதியாகவும் இருந்தான். ஏ–யின் குமாரர்களும் ஆசாரியர்களாக இருந்தனர். எனினும் அவர்கள் அடங்காதவர்களாகவும், அநீதியை ஆதரிப்பவர்களாகவும், தங்களது பதவியையும் தங்களது தகப்பனாரின் பதவியையும் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி நீதியின் கொள்கைகளுக்கு தீங்கு விளைவிக்கும்படியாகவும் வாழ்ந்து அப்பட்டமான தவறான நடத்தையுடையவர்களாகவும் காணப்பட்டார்கள். ஏ– தேவனால் கடிந்து கொள்ளப்பட்டான். ஏனெனில் அவனது குமாரர்கள் தங்களது ஆசாரிய தொழிலுக்கும், தேவனுக்கும் இசைவில்லாததையும், தேவனுடைய சித்தத்திற்கு விரோதமானவைகளையும் செய்வதை ஏ– தடுக்கவுமில்லை, அவர்களை சரியானபடி கட்டுப்படுத்தவுமில்லை. இந்த கண்டன வார்த்தைகள் சிறுபையன் சாமுயேல் மூலமாக ஏ–க்கு தெரிவிக்கப்பட்டது. தேவன் தம்முடைய சிந்தையில் உள்ளதையும், ஏ–க்கும் அவனது குடும்பத்துக்கும் கொடுக்கப்பட்டிருந்த கனம் ஏன் நீக்கப்படப்போகிறது என்பதையும் சுட்டிக் காட்டினார். இந்த காரியத்தில் தேவனுடைய அபிப்பிராயம் நாம் பார்க்கிற, “என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்” என்கிற வசனத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.

### பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்குதலும், தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளித்தலும்

இது எக்காலத்திலும் உண்மையாயிருக்கக்கூடிய ஒரு கொள்கையாக இருக்கிறது என்று நாம் நம்புகிறோம். இப்பொழுது, இன்றைக்கு தேவனை கனப்படுத்தும்படி நாடுகிறவர்கள் கனப்படுத்தப்படுவது நிச்சயம். சுய கனத்தை தேடுகிறவர்கள் ஓரளவுக்கு கனத்தை அடைந்து, ஓரளவுக்கு தங்களையே மகிமைப்படுத்திக் கொள்வார்கள். ஆனால் அவர்களை மகிமைப்படுத்துபவர் கர்த்தராக இருக்கமாட்டார். அவருக்கு செய்யும் ஊழியத்தினிமித்தமோ, சத்தியத்தினிமித்தமோ அவர்கள் அவரால் மகிமைப்படுத்தப்படமாட்டார்கள். “தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை (ஆதரவு) அளிக்கிறார். “தேவனுடைய சித்தத்தை அறிவதை நாடி உண்மையான இருதயத்துடனும் அதை செய்ய வேண்டும். அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்படியாக, நமது அனைத்து காரியங்களிலும் தேவனே முதலாவதாக இருக்கும்படியாக நாட வேண்டும். இதுவே தேவனை மகிமைப்படுத்தும் முறையாகும். நம்மைப்பற்றியோ, நமது சொந்த மகிமையைப்பற்றியோ கவலைப்படக்கூடாது. தேவன் ஆதரவு அளிக்கிற கொள்ளைகளின்படி நாம் ஊழியம் செய்யவேண்டும். அவரது பிள்ளைகளாகவும் அவரால் ஆசீர்வதிக்கப்பட்டுமிருக்கிற நமக்கு தேவனுடைய மகிமையை தேடுவதே சரியான மார்க்கமாகும்.

நமது கர்த்தரின் சில வசனங்களின் பொருளுக்கு மாறுபாடாக இருப்பதைப் போல தலைப்பு வசனம் இருக்கிறதாக காணப்படுகிறது, “உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்.” இந்த வசனத்தை நாம் ஜாக்கிரதையாக ஆராய்வோமானால், தம்மை கனம் பண்ணுகிறவர்களை கனம் பண்ணுவேன் என்று கர்த்தர் கூறியிருந்தாலும், “அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்” என்று கூறுகிறார். எனினும் அவர் தம்மை கனம் பண்ணாமலும் அன்பு செலுத்தாமலும் இருக்கிறவர்களுக்கு தீங்கு செய்வேன் என்று கூறவில்லை. மாறாக அவரது முன்னேற்பாடு “பூமியின் வம்சங்களெல்லாம்” என்று பரந்து இருக்கிறது. தேவன் இப்படியாக தமக்கு சத்துருக்களாக இருக்கிறவர்களையும் சிநேகிக்கிறார்; அவர்கள் தம்முடன் உறவாகும்படி ஒரு ப–யை கொடுக்கிற அளவுக்கு அவர்களை சிநேகிக்கிறார். ஆனால் அவர் தமது சத்துருக்களை கனம் பண்ணுவதில்லை.

### பாவத்தை வெறுத்தலும் பாவியை சிநேகித்தலும்

தேவன் தமது சித்தத்தின்படி செய்ய நாடுகிறவர்களை விசேஷித்த விதமாக சிநேகிக்கிறார் என்று நாம் நன்றாக நம்பலாம். சத்துருக்களை சிநேகிக்கும்படி நாம் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். ஆனால் அதற்கு கிறிஸ்துவின் சரீர அங்கங்களை சிநேகிக்கும் அதே மாதிரி அன்பு செலுத்த வேண்டும் என்று பொருளல்ல. வேறுபாடு என்னவென்றால், நான் சத்துருக்களை சிநேகிப்பது அனுதாப அன்பாகும். ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களை சிநேகிப்பது பரிசுத்தமான அன்பு, குடும்பத்தினர் மேல்

செலுத்தும் அன்பு, தோழமையான அன்பு ஆகும். பாவம் தேவனுக்கு அன்பானது அல்ல. அல்லது தேவனுடன் உறவு வைத்திருக்கிற யாருக்கும், அவரது ஆவியை பெற்றிருப்பவர்களுக்கும் பாவம் அன்பானது அல்ல. பாவம் என்பது ஒழுங்கீனமானது, பெருங்கொடுமையானது, தேவ ஆவியாகிய சிந்தையை புண்படுத்தக்கூடியது. ஆனால் தேவன் பாவிகளின் மேல் அனுதாப அன்புடையவராயிருக்கிறார்; நாமும் அதையே செய்யும்படி விரும்புகிறார். நமக்கு தீமை செய்கிறவர்களுக்கும், கனிவில்லாமல் நம்மை நடத்துகிறவர்களுக்கும், நம்மை துன்பப்படுத்துகிறவர்களுக்கும் நாம் நன்மை செய்ய தயாராயிருக்க வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். இப்படியாக நாம் தேவனை பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டும்.

தேவன் மனித குடும்பத்தி–ருந்து குறிப்பிட்ட சிலரை தம்முடைய ஸ்தானாதிபதிகளாயிருக்கும்படி தேர்ந்தெடுக்க விரும்புகிறார். மனுக்குலத்திடம் நேரடியாக பேசுவதற்கு பதிலாக அவருடைய பிள்ளைகளாகிய இந்த பிரதிநிதிகளின் மூலமாகவே பேச விரும்புகிறார். அவருடைய சித்தத்தை செய்ய நாடுகிறவர்களும், அவரது வார்த்தைக்கு உண்மையுள்ளவர்களாயுமிருக்கிற இவர்களைத்தான் அவர் தம்முடைய பிரதிநிதிகளாக்கவும், கனம் பண்ணுவதிலும் சந்தோஷப்படுகிறார். அவரை சரியாக பிரதிநிதித்துவப் படுத்தாதவர்களை தேவன் ஸ்தானாதிபதிகளாக தெரிவு செய்வாரா? நிச்சயமாக இல்லை! இங்கே நாம் தேவனுடைய பிள்ளைகளாக அவரது சாட்சியத்தின் ஆவிக்குள்ளாக நுழைய முடியும். ஆகையால் நாம் தேவனுடைய பெருமையை மற்றவர்களிடம் காண்பிப்பது மூலமும் அவரது தூய செய்தியை அறிவிப்பதின் மூலமும் நமது உயர்ந்த வாழ்க்கையின் மூலமும் அவரைக் கனப்படுத்த நாடலாம். இதன் மூலம் இப்பொழுது அவரது ஆசீர்வாதங்களையும் சமீபமாயிருக்கிற ராஜ்யத்தில் உண்மையுள்ளவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற மகா கனத்தையும் நாம் பெறலாம்.